செ.வெ. எண்: 423 நாள்: 19–07–2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (19.7.2012) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர காவல் துறையினருக்கு 5 கோடியே 55 லட்சத்து 53 ஆயிரத்து 630 ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 87 புதிய ரோந்துக் காவல் வாகனங்களை (Mahindra Bolero) வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காவல் துறையை அதிநவீனமயமாக்கவும், அத்துறையில் பாணியாற்றும் காவலர்களின் நலன்களுக்காகவும், பல முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், சென்னை மாநகரில் ரோந்துக் காவல் பணியின் தரத்தினை மேம்படுத்தி, அனைத்து பகுதிகளிலும் காவலர்களின் கண்காணிப்புப் பணி இடைவிடாது இருக்கவும், பொதுமக்களின் பாதுகாப்பிற்கு சிறப்புற சேவை செய்திடவும், அதிக அளவு ரோந்து வாகனங்கள் தேவை என்பதை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 87 புதிய ரோந்து வாகனங்களை வாங்குவதற்கு உத்தரவிட்டார்கள்.

அதன்படி, சென்னை பெருநகர காவல் துறையினருக்கு 5 கோடியே 55 லட்சத்து 53 ஆயிரத்து 630 ரூபாய் செலவில் அதிநவீன கருவிகள் பொருத்தப்பட்ட 87 புதிய ரோந்துக் காவல் வாகனங்கள் (Mahindra Bolero) வாங்கப்பட்டது. அவற்றை சென்னை பெருநகர காவல் துறையினரின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 19.7.2012